சமஸ்கிருதமயமான ‘வந்தே மாதர’த்திற்கு முதலிடம் தந்து “மீண்டும் தமிழுக்கு மூன்றாமிடமா?”

# தமிழ்நாடு ஒருபோதும் ஏற்கவே ஏற்காது! வன்மையான கண்டனத்திற்குரியது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 23-

சமஸ்கிருத மயமான ‘வந்தே மாதர’த்திற்கு முதலிடம் தந்து “மீண்டும் தமிழுக்கு மூன்றாமிடமா?” தமிழ்நாடு ஒருபோதும் ஏற்கவே ஏற்காது!

இது வன்மையான கண்டனத்திற்குரியது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

21.5.2026 அன்று காலை ஜோசப் விஜய் அவர்களது ஆட்சி, தனது அமைச்சரவையின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தை அறிவித்து, 23 புதிய அமைச்சர்கள் (காங்கிரஸ் கட்சிக்குத் தந்த இரண்டு அமைச்சர்கள் உள்பட) பதவியேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில், முதலிடம் ‘வந்தே மாதரம்’ பாட்டுக்கு! (சமஸ்கிருத மயமாக்கப்பட்ட வங்காளம்) இரண்டாவது, ‘ஜன கண மன அதி நாயக’ ‘நாட்டுப் பண்’ என்பதைப் பாடி, ‘நீராரும் கடலுடுத்த’ என்ற மொழி வாழ்த்துப் பாடல் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

முந்தைய ‘திராவிட மாடல்’ அரசு, தொடர்ந்து கடைப்பிடித்த செம்மொழியாம் எம் மொழி தமிழுக்கு முதலிடம் தந்து, தேசியப் பண் (‘ஜன கண மன’ பாட்டு) சட்டமன்றத்தில் இறுதியில்தான் இசைக்கப்படும் வகையில் நிகழ்வை நடத்திய போது, அதற்கு அடாவடித்தனம் செய்த, முன்னிருந்த ஆர்.என். ரவி என்ற ஆளுநரின் போக்கை அனுமதிக்காமல், இந்த உரிமையை அன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிலைநாட்டினார்.

தமிழுக்கு நிரந்தரமாக மூன்றாமிடம் என்றாக்கியுள்ளார் பொறுப்பு ஆளுநர்!

சென்றமுறை பதவியேற்பு விழாவின்போது நடைபெற்ற அதே முறை போன்றே, இம்முறையும் இன்றைய பதவியேற்பு விழாவையும் நடத்திக் காட்டி, தமிழுக்கு நிரந்தரமாக மூன்றாம் இடம் என்றாக்கியுள்ளார் பொறுப்பு ஆளுநர் அர்லேகர் - அதனை ஏற்றுக்கொண்டுள்ளது தமிழ்நாடு புதிய அரசு.

முன்பு, இதுபற்றி வன்மையான கண்டனத்தைத் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளும், நாமும் எழுப்பிய நிலையில், புதிய முதலமைச்சர் சார்பில், அவரது அமைச்சர்களில் ஒருவரான ஆதவ் அர்ஜுனா அவர்கள் மூலம், “இனிமேல் இப்படி நடக்காது” என்றும், “தமிழ் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்படுவதை ஏற்கமாட்டோம்” என்றும் கூறப்பட்ட வாக்குறுதி, இவ்வளவு விரைவில், சில நாள்களிலேயே காற்றில் பறக்க விடப்படுகிறதா?

### தமிழ்நாட்டிற்குத் தலைக்குனிவு!

இந்த ஆட்சியின் தொடக்கமே தமிழ்நாட்டின் மரபை உடைத்து, சமஸ்கிருதத்தினை முதன் மொழியாக்கி, தமிழை மூன்றாவது இடத்திற்குத் தள்ளிவிட்டு மகிழும் ஆர்.எஸ்.எஸ். - சமஸ்கிருதப் பண்பாட்டுத் திணிப்பை, டில்லி எஜமானத் தனத்திற்கு அடிபணியும் போக்குக்கு இடந்தந்து தமிழ்நாட்டிற்குத் தலைக்குனிவை ஏற்படுத்துவதா?

‘கொள்கை எதிரிகளிடம்’ இப்படி ஒரு சமரசப் போக்கா? இதைத் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்கவே ஏற்காது! புதிய ஆட்சியின் “நம்பகத்தன்மை” இப்போது இவ்வளவு குறுகிய இடைவெளியில் சந்தேகத்திற்குரிய கேள்விக்குறியாகலாமா?

முன்பு, ஆளுநர் மாளிகையின் ‘லோக் பவன்’ ஏற்பாடு செய்தது என்று ஒருவகை சமாதானம் கூறப்பட்டது. இப்போது புதிய முதலமைச்சராகியுள்ள ஜோசப் விஜய் அவர்களின் ஆணைப்படி நடக்கவேண்டிய பொதுத் துறை (Public Department) நிகழ்ச்சி தானே! இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி நிரல் முறைப்படி, புதிய முதலமைச்சர் ஒப்புதலுடன்தானே நடந்திருக்க வேண்டும்?

### அலட்சியப்படுத்துவது வன்மையான கண்டனத்திற்குரியது!

இது தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்தமான உணர்வு பொங்கும், உணர்ச்சிப்பூர்வமான பிரச்சினை - அதனை அலட்சியப்படுத்துவது வன்மையான கண்டனத்திற்குரியது!

இதனைத் தமிழ்நாட்டு மக்களின் எச்சரிக்கையாகக் கொண்டு, பார்க்கத் தவறினால், அதன் பாரதூர விளைவுகளை இவ்வளவு விரைவில் ஏற்கவேண்டிய கட்டாயம் புதிய அரசுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---



ஒன்றிய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் விலையை கடுமையாக உயர்த்தியதைக் கண்டித்து தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்தும், பெட்ரோல், டீசல் விலை உயர்வால் விலைவாசி உயரும் அபாயம் உள்ளதையும், விலை உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தியும் சென்னை எழும்பூரில் உள்ள இராஜரத்தினம் ஸ்டியத்தில் 18.04.2026 அன்று மாலை 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

---

விழுப்புரம் வடக்கு மாவட்ட

# சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

மயிலம், மே 23-

தி.மு.க. சட்டப்பேரவை கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின் தேர்வு செய்ததை வரவேற்று மைலம் தொகுதி திமுக சார்பில் நன்றியும் வாழ்த்துக்களை தெரிவித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் தீவனூரில் நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்,ஆரணி எம். எஸ். தரணிவேந்தன் எம்.பி. ஆகியோர்கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினர்.

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் கழகத் தலைவர் மு. க ஸ்டாலின் அவர்களுக்கும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 1 கோடியே 54, லட்சத்தி 89 ஆயிரத்து 500 வாக்காளப் பெருமக்களுக்கும் நடந்து முடிந்த மைலம் தொகுதி சட்டமன்ற பொது தேர்தலில்வெற்றிக்காக உழைத்த அனைத்து நிர்வாகிகளுக்கும்,வாக்காளர்களுக்கும் பொதுமக்களுக்கும், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும், மைலம் சட்டமன்ற தொகுதி சார்பில்மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொண்டனர்.

தொடர்ந்து கழக இளைஞரணி செயலாளர் முன்னாள் துணை முதல்வ ர்உதயநிதி ஸ்டாலின் அவர்களை திமுக கழகத்தின் சட்டப்பேரவை கட்சி தலைவராக தேர்வு செய்து சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்ற வாய்ப்பு அளித்தகழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர்உள்ளிட்ட தலைமை கழக நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியும் தெரிவித்து தீர்மணம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,மாவட்டத் துணைச் செயலாளர் அருணகிரி, பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, ராஜா ராமன், மணிமாறன், மொடையூர் துரை, இளம் வழுதி, செழியன் நிர்வாகிகள் கே எஸ் செந்தில்குமார், விஜயன், செல்வகுமார், சசிகுமார், பாஸ்கர், தீவனூர் சேகர், பிரபு, ரமேஷ், வேல்முருகன், அன்பு சேகர்,இளைஞர் அணி சம்சுதீன்,ராம்குமார்,

ராஜ்பரத், சுப்பிரமணி, கமலக்கண்ணன், ஞானசேகர், பிரகாஷ், விஜயன், சுரேஷ், குருஜி, சிவானந்தம், அன்பு, சேகர், குப்பன் ,நிர்மல் குமார், ஆறுமுகம் ,அர்ஜுனன், பழனிவேல், வீடூர் பிரகாஷ்,உள்ளிட்டநிர்வாகி கள் கலந்துகொண்டனர்.

---

### தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## தி.மு.க, விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 26.05.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 22.05.2026.

**ஏ.கே.எஸ். விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

---

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

போற்றுதலுக்குரிய கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பின்படி - சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு கள ஆய்வு நடைபெறவுள்ளது. இதில் மூத்த வழக்கறிஞர் ஏ.சரவணன் மற்றும் நா.இளையராஜா ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

| வ.எண் | நாள் | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1. | 25.05.2026 திங்கட்கிழமை | காலை 10.00 மணி | சேலம் தெற்கு தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |
| 2. | 26.05.2026 செவ்வாய்கிழமை | காலை 10.00 மணி | சேலம் வடக்கு தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |
| 3. | 27.05.2026 புதன்கிழமை | காலை 10.00 மணி | சேலம் மேற்கு தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |
| 4. | 28.05.2026 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | ஓமலூர் தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 22.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம்

# வடக்கு தாமரைக்குளம் ஊராட்சிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, மே 23-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், வடக்கு தாமரைக்குளம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 21.05.2026, வியாழக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் வடக்கு தாமரைக்குளம், சிவன் கோவில் அருகில் வைத்து அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றிய பொருளாளர் எட்வின், தென்தாமரைகுளம் பேரூர் செயலாளர் T.பூவியூர் காமராஜ், மாவட்ட பிரதிநிதிகள் தனசம்பத், தமிழ்மாறன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தமிழன் டி.ஜானி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.பொன் ஜாண்சன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஐயப்பன், திருமதி. ஹெப்சிபாய் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக தேர்தல் பணியாற்றிய கழகத்தினருக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி அன்று ஒவ்வொரு கிளை கழகமும் தலைவர் கலைஞர் அவர்களின் திரு உருவ படத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புடன் கொண்டாட வேண்டுமென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர். முகிலன்
### மே 23 (1999)



1954இல் கழக உறுப்பினராகி பின்னர், கோமல் கிளைக் கழகச் செயலாளர் – மயிலாடுதுறை வட்டக் கழக துணைச் செயலாளர் – வட்டக் கழகப் பொறுப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மயிலாடுதுறை பகுதியில் கழகம் வளர உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

1962இல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் – மிசா கைதியாக ஒரு மாத சிறைவாசம்; மேலும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**